

மரங்கள் வெட்டப்படுவதை கண்டித்து சமூக ஆர்வலர்கள் மரக்கன்றுகளுடன் கோவை கலெக்டர் அலுவலகத்துக்கு மனு கொடுக்க வந்த போது எடுத்தபடம்.

**கோவையில், மரங்கள் வெட்டுவதை கண்டித்து**

# மரக்கன்றுடன் கலெக்டர் அலுவலகத்தில் திரண்ட சமூக ஆர்வலர்கள்

கோவை,ஜூலை.5–

கோவையில் மரங்கள் வெட்டப்படுவதை கண்டித்து, மரக்கன்றுகளுடன் சமூக ஆர்வலர்கள் கலெக்டர் அலுவலகம் வந்தனர்.

### மரங்கள் வெட்டுவதற்கு எதிர்ப்பு

குளு,குளு ஊட்டிக்கு அடுத்தபடியாக கோவையும் அதன் குளுமையை காத்து வருகிறது. இதற்கு காரணம் ஏராளமான மரங்கள், மற்றும் நீர்நிலைகள் தான்.

இந்த நிலையில் சமீபகாலமாக சாலையோர மரங்கள், மற்றும் அரசு அலுவலகங்களில் குறிப்பிட்ட மரங்கள் வெட்டுவது வாடிக்கையாக உள்ளது. நிர்வாக வசதிக்காக ஒரு மரத்தை வெட்டினால் மற்றொரு மரத்தை வளர்ப்பதற்கு யாரும் தயாராக இல்லை. மேலும் குறிப்பிட்ட மரங்களை வெட்டுவதற்கு அனுமதி பெற்றுவிட்டு, கூடுதலாக மரம் வெட்டும் சம்பவங்களும் நடப்பதால் பசுமை கோவைக்கு பாதிப்பு வந்துவிடும் நிலை உள்ளது. இதற்கு அனைத்து சமூக ஆர்வலர்களும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

### மரக்கன்றுகளுடன் வந்தனர்

இதற்கிடையில் ஓசை, ராக், தமிழக விவசாயிகள் சங்கம், மாசு விழிப்புணர்வு இயக்கத்தை சார்ந்த சமூக ஆர்வலர்கள் மற்றும் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக், விடுதலை சிறுத்தைகள், பெரியார் திராவிட கழகம், மதி.மு.க உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர் நேற்று கோவை கலெக்டர் அலுவலகம் வந்து, கலெக்டர் கருணாகரனிடம் மனு கொடுத்தனர். அந்த மனுவில் அவசியம் இல்லாமல் மரங்களை வெட்டக்கூடாது என்று வலியுறுத்தினர்.

இந்த நிகழ்ச்சியில் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சி மாநில செயலாளர் முகமது ரபீக் தலைமையில் மாவட்ட தலைவர் நிசாருதீன், ஜாபர் சாதிக், ஆரீப், ஜியாவுதீன், மற்றும் பெரியார் திராவிடகழக ராமகிருஷ்ணன், விடுதலை சிறுத்தைகள் அமைப்பு சார்பில் மாவட்ட செயலாளர் சுசி.கலையரசன், தென்னரசு, கோவை குரு, விடுதலை அரசு, விவசாயிகள் சங்க தலைவர் வழுக்குப்பாறை பாலு, மாசு விழிப்புணர்வு இயக்க தீபம் சுவாமிநாதன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### வெட்டக்கூடாது

இது குறித்து மாசு விழிப்புணர்வு இயக்கத்தினர் கூறுகையில், கோவையில் மரங்கள் வெட்டுவதை தடுக்க வேண்டும். மிக அவசியம் ஏற்பட்டால் மட்டுமே மரங்கள் வெட்டப்பட வேண்டும். அவ்வாறு வெட்டுவதற்கு முன்னதாகவே இரண்டு மரங்கள் வளர்க்கப்பட வேண்டும்.

அரசு அலுவலகங்கள், பள்ளிக்கூடங்களில் மரங்கள் வளர்ப்பதை ஊக்குவிக்கும் வகையில் நாங்கள் இலவசமாக மரக்கன்று அளித்து வருகின்றோம் என்றார். இது குறித்து முகமது ரபீக் கூறுகையில், மரங்கள் என்பது வீட்டில் வளரும் பிள்ளைகள் போன்றது. அதற்கு பால் ஊட்டுவது போன்று தண்ணீர் ஊற்றி வளர்க்க வேண்டும். அதை விட்டுவிட்டு, அதை வெட்டுவது மோசமான செயல். இது கண்டிக்கத்தக்கது. இந்த நிலை நீடித்தால், எங்கள் கட்சி சார்பில் முதல்–அமைச்சர் ஜெயலலிதா கவனத்துக்கு கொண்டு செல்வோம் என்றார்.